# பச்சைக் கண் மாமி

299

299

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 AUG 1948
MADRAS

TB
O-,3x
N48
85383

# பச்சைக் கண் மாமி

# என் நடைதான் என் பிள்ளை நடை

# அத்தனை பிள்ளைகளும் அடிமைகள்

# பழுத்த இலை

OFFICE OF THE REGISTRAR OF B
6 - AUG 1948
MADRAS

ருக்மிணி ராமசேஷன், M.A.,
*Formerly Lecturer of the Queen Mary's College, Madras.*

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNITED SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
MADRAS BANGALORE MYSORE VIJAYAWADA COLOMBO
1948

COPYRIGHT

*First Edition, 1948* M

TB
O-1 3
N48

85383

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS
FOR THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA—28-7-1948. B 5653.

# பச்சைக் கண் மாமி

ஊர் ஊர் என்று ஒரு ஊர்!
ஊர் ஊருக்கு ஒரு பூனை!
ஊர் ஊர்ப் பூனையுந்தான்



ஒன்றுக்கும் உதவாத
கிழட்டுப்பூனை!

எழுந்திருக்க முடியாத
கிழட்டுப்பூனை!
எலிபிடிக்க முடியாத
கிழட்டுப்பூனை!
அடுப்பங்கரைச் சாம்பலிலே
அழுந்திப் படுத்து இருந்ததாம்.
அப்போது அங்கே ஒரு எலி
வந்ததாம்.
எப்போதும்போலப்பூனையைக்
கண்டு ஓடாமல் நின்றதாம்.
அடுப்பங்கரையில்
கிழட்டுப்பூனையை எட்டி நின்று
அஞ்சாமல் பார்த்ததாம்.
எடுப்பாய்எட்டி நின்றுபார்த்து
ஏளனமாகச் சிரித்ததாம்
"வலுவிலே வந்து
வாலை ஆட்டுகிறாய் எலியே!

தொலைவிலே நின்று கேலி
பண்ணித் துளைக்காதே
என் செவியை!"
என்று கிழட்டுப்பூனை கத்தியதாம்.



அதைக் கேட்ட எலி கொஞ்சம்
கோபத்தோடு,
"வீட்டு மூலையிலே
முட்டங் காலை
முடக்கிக் கொண்டு

விட்டில் பூச்சிபோல
விழுந்தாயோ பாட்டி!
கண்ணை மூடிக்கொண்டு
கொட்டாவி விடுகிறாய்!
சாம்பலிலே வீழ்ந்தவுடன்
வெந்தாயோ பாட்டீ!"
என்று கேட்டதாம்.

அடுப்பங் கரையிலே அயர்ந்து படுத்திருந்த கிழட்டுப்பூனை கண் இரண்டையும் இறுக மூடிக் கொண்டதாம். அழுது வழியும் குரலிலே,

"கண்ணோ தெரியவில்லை,
கண்ணே!
காதும் கேட்கவில்லை பெண்ணே!
எண்ணத் தொலையாத வயதும்
ஆனது.
எழுந்திருக்கவோ முடியவில்லை;

என் உயிரோ ஊசல் ஆடுகிறது.
கெஞ்சிக் கேட்கிறேன் சீமாட்டி!
கொஞ்சம் கிட்டவா, ராசாத்தி!"
என்றதாம்.

எலி தொலேவிலே நின்று கொண்டே,

"பச்சைக் கண் மாமியே!
பழுத்த மூக்கு மாமியே!
உங்கள்
பேச்சும் சிரிப்புத்தான்!
பிழைப்பும் சிரிப்புத்தான்!
கொட்டை நூற்றுத் தின்ன
லாகாதோ — கண்
பொட்டையாகப் போனாலும்?
மீசை நரைத்துப் போனாலும்
ஆசை நரைத்துப் போகவில்லே.
நேசமாகப் பேசக் கற்றாய்!

மோசக்காரிப் பூனைப்பாட்டி
யே!"

என்றதாம்.

இப்படிச் சொல்லி விட்டு அங்கே நில்லாமல் ஓடியே போய் விட்டதாம்.

கதை முடிந்ததாம்.

கத்தரிக்காய் காய்த்ததாம்.



# என் நடைதான் என் பிள்ளை நடை

நண்டம்மா! நண்டம்மா!
வாய்க்கால் கரை நண்டம்மா!

வளைதோண்டிக் குடியிருக்கும்
வட்டவுடல் நண்டம்மா!

எட்டுக்கால் நண்டம்மா!
என்றும் கோணி நடக்கும் நண்
டம்மா!

குளக்கரையில் திரிந்து வரும்
கோணல் காலி நண்டம்மா!

நேராக நடக்கத் தெரியாத நண்டம்மாவுக்கு ஒரு பாப்பா பிறந்ததாம்.

பாப்பா நண்டும் அம்மா நண்டைப் போலவே கோணிக் கோணி நடந்ததாம். பாப்பா நண்டுக்கும் நேராக நடக்கவே தெரியவில்லை.



பாப்பா நண்டு கோணி நடப்பதைக் கண்ட அம்மா நண்டு ரொம்பத் துக்கமாக இருந்தது.

"ஐயோ! என் குழந்தை ஏன் தான் இப்படி நடக்கிறதோ?

தெரியவில்லையே, என்னைப்போல நேராக நடக்கலாகாதோ?" என்று அழுது புலம்பியதாம்.

ஒருநாள் அம்மா நண்டுபாப்பா நண்டைப் பார்த்து, "என் கண்ணே, நண்டுப் பாப்பா! கோணிக் கோணி நடக்காதே. நேராக நடந்து பழகவேணும்" என்றதாம்.

பாப்பா நண்டு அம்மா நண்டு சொன்னதைக்கேட்டதாம். சின்னச் சிரிப்பு சிரித்துக்கொண்டே,

"என்னைப் பெற்ற என் அம்மா! உன்னைப்போல நான் நடப்பேன். முன்னே நீ நடந்துகாட்ட வேணும். பின்னுல் நான் நடந்து காட்டிடு வேன்" என்றதாம்.

அதைக் கேட்ட அம்மா நண்டு, "கண்ணே, என் கண்மணியே!

கண்ணெதிரில் நடந்து காட்டுகிறேன். என்னைப்போல் அழகாக நீ நடந்தால் எல்லாரும் உன்னைப் புகழ்வார்கள்" என்றதாம்.

பாப்பா நண்டுக்கு எதிரில் அம்மா நண்டு கோணிக் கோணி நடந்தது. பாப்பா நண்டும் கோணிக் கோணி நடந்தது.

அம்மா நண்டு அப்படிக் கோணி நடந்தது. பாப்பா நண்டும் அந்தப்படியே கோணி நடந்தது.

அம்மா நண்டு இப்படிக் கோணி நடந்தது. பாப்பா நண்டும் இந்தப்படியே கோணி நடந்தது.

அம்மா நண்டு அப்படியும் இப்படியும் கோணி நடந்தது. பாப்பா நண்டும் அப்படியும் இப்படியும் கோணி நடந்தது.

அம்மா நண்டு எப்படி எப்படி எல்லாம் கோணிக் கோணி நடந்ததோ, அப்படி அப்படி எல்லாம் பாப்பா நண்டும் கோணிக் கோணி நடந்தது.



ஆற்றிலும் குளத்திலும் இருந்த மீன்கள் எல்லாம் கை கொட்டிச் சிரித்தன.

"தாயைப் போல் பிள்ளை!
நூலைப் போல் சேலை!

அம்மா கோணலுக்குப்
பிள்ளைக் கோணல்
எம்மாத்திரம்?
அம்மா நண்டு கோணி
நடந்தால்
பாப்பா நண்டும் கோணி
நடக்காதோ?"

என்று கேலி பண்ணின.

நண்டம்மாவுக்குக் கோபம் பொங்கி விட்டது. "என் நடை தான் என் பிள்ளை நடை! என் நடை கோணல் என்றால், என் பிள்ளை நடையும் கோணலாக இருக்கட்டும். நான் நடக்கிற நடை எனக்கு அழகு! என் பிள்ளை நடக்கிற நடை அதற்கு அழகு!" என்றதாம்.

கதையும் முடிந்தது
கத்தரிக்காயும் காய்த்தது.

TB
O-134
N4

# அத்தனை பிள்ளைகளும் அடிமைகள்

85383

ஒரு ஊரில் ஒரு அம்மாக் கிளியும், அப்பாக் கிளியும் இருந்தன. அம்மாக் கிளிக்கு ஐந்து கிளிப்பிள்ளைகள். ஐந்தும் அழகான கிளிப்பிள்ளைகள்.

அம்மாக் கிளியும், அப்பாக் கிளியும், ஐந்து கிளிப் பிள்ளைகளும் அழகான கூண்டிலே வாழ்ந்து வந்தன.

ஒருநாள் கிளிகளைப் பார்க்க ஒரு பாட்டிக் காக்காய் வந்தது.

பாட்டிக் காக்காயைப் பார்த்த உடனே அம்மாக் கிளிக்கு ரொம்ப சந்தோஷம் வந்துவிட்டது.



அம்மாக்கிளி, பாட்டிக்காக்கா
யைப் பார்த்து,
"வாரும், வாரும், பாட்டியம்மா!
வந்து பாரும் காக்காய் அம்மா!
வாழும் எங்கள் கூண்டைப்
பாரும்!
வளரும் குழந்தைகளின் அழ
கைப் பாரும்!"

என்று ரொம்பப் பெருமையாகப் பேசினதாம்.

அதைக் கேட்ட பாட்டிக் காக்காய்,

"போதும்! போதும்! மேலும்
பேசாதே!
பொன்னால் செய்த கூண்டிலே
வாழ்ந்தாலும்,
எதும் செய்யத் திறன் இல்லாத
அடிமைகளே!
எத்தனை பிள்ளைகளைப் பெற்றா
யோ?
பெற்ற பிள்ளைகள் அத்தனையும்
அடிமைகளே!"

என்று சொல்லிக்கொண்டே பறந்து போய் விட்டதாம்.

கதையும் முடிந்ததாம்
கத்தரிக்காயும் காய்த்ததாம்.

# பழுத்த இலை

ஒரு பெரிய அரசமரமாம்; அதில் பெரிய கொம்பிலே ஒரு சிறு கிளையாம். அந்தச் சிறு கிளையில் ஒரு சிறு கொப்பில் ஒரு சிம்பு இருந்ததாம். அந்தச் சிம்பில் சின்னஞ்சிறு தளிர் இலை ஒன்று இருந்ததாம். அது காலையிலே தங்கவெயிலில் 'தளதள' 'பளபள' என்று பிரகாசித்துக்கொண்டு இருந்தது.

இளம் தென்றல் இனிமையாகப் பாடிக்கொண்டு மெதுவாகத் தவழ்ந்து வந்தது. ஒரு பழுப்பு இலை இன்னொரு பழுப்பு இலையைப் பார்த்து "அக்கா, தென்றல் பாடுகிற பாட்டைக் கேள்" என்றது.

உடனே பழுப்பு இலைகள் எல்லாம் தென்றல் வரும் பக்கமாகச் சாய்ந்தன.



"வேனிலும் போனது இலைகளே!

வேலையும் முடிந்தது இலைகளே!

வானிலே பறக்கலாம் இலைகளே!
வாழ்விலே கடமையும் முடிந்ததே!"

என்று தென்றல் பாடின பாடலைப் பழுப்பு இலைகள் கேட்டன.

ஒரு பழுப்பு இலை இன்னொரு பழுப்பு இலையைப் பார்த்து, "ரொம்ப இனிமையான பாட்டு; அந்தத் தென்றல் நம்மை அன்பாக அழைக்கிறதே அக்கா" என்றது.

சில நிமிஷங்கள் சென்றன. உடனே சூரியனுடைய இளங்கதிர் ஒன்று

"செழுமை பசுமை நீங்கின;
செய்யும் கடமைகள் முடிந்தன.
பழுத்துப் போன இலைகளே!
பறந்து போங்கள் மண்ணிலே!
ஒட்டி உலர்ந்து பழுத்தபின்,
உலகில் வாழ்ந்து பயன் இல்லை,
கட்டும் கயிறு அறுந்தபின்
காற்றில் பறந்து மகிழுவீர்!"

இந்தப் பாட்டைத் தளிர் இலை கேட்டது. தளிர் இலைக்குத் தென்றலில் பறந்துபோக ஆசை. பழுத்த இலைகள் ஒவ்வொன்றுகப் பெயர்ந்து காற்றில் மிதந்து பறந்து சந்தோஷமாகக் கீழே விழுவதைத் தளிர் இலை பார்த்தது. அதற்கும் கீழேவிழ ஆசையாக இருந்தது.

ஆனால், அதனால் சிம்பிலிருந்து பெயர்ந்துபோக முடியவில்லை. தளிர் இலை அழத்தொடங்கியது. தளிர்இலை அழுகிறது என்று சிம்பு கொம்பினிடம் சொல்லியது. கொம்பு அதைக் கிளையிடம் சொல்லியது. கிளை அதை அம்மா மரத்தினிடம் சொல்லியது.

அந்தச் செய்தியைக் கேட்ட அம்மா மரம்,

"அழவேண்டாம் தளிர் இலையே,—
உன்னை அன்பாகக் காத்திடுவேன்.
அழகான தென்றலிலே — மெல்ல
அசைந்தாடி மகிழ்ந்திருப்பாய்.
காலையிலும் மாலையிலும்
குளிர்ந்தகாற்றுடனே விளையாடிச்
சோலையிலே மகிழ்ந்திருப்பாய்—
வெகு சொகுசாக வாழ்ந்திருப்பாய்.

பொங்கி வரும் செங்கதிர்தான்—
உன்னைப் பொன் ஒளியால் அழகு
செய்யும்!
மங்கல நீர் ஆட்டிவைக்க மேகம்
மழை நீரைப் பொழிந்து தரும்
என்று ஒரு பாட்டுப் பாடியது."

இந்தப் பாட்டைக் கொம்பு கிளையிடம் பாடிக் காட்டியது. கிளை இதைக் கொப்பினிடம் பாடிக் காட்டியது. கொப்பு இதைச் சிம்பினிடம் பாடிக் காட்டியது. சிம்பு இதைத் தளிரிலையிடம் பாடியது. தளிர் இலை அம்மா சொன்னபடியே காற்றை நன்றாய்க் குடித்தது. தங்கவெயிலில் நன்றாய் மகிழ்ந்தது. குளிர் மழையில் நன்றாய்க் குளித்தது.

சில நாட்கள் சென்றன. தளிர் இலை கடும் பச்சை நிறமாச்சு.

மெள்ள மெள்ள இளம் பொன்நிற மாச்சு. கடைசியில் ஒரே பழுப்பு நிறம்! புதுப் பழுப்பிலைக்குப் பக் கத்திலே வேறு பழுப்பு இலைகள் இருந்தன. இந்தப் பழுப்பு இலை மற்றப் பழுப்பு இலைகளோடு பேசத் தொடங்கியது.

"தென்றல் பாடிக்கொண்டு வந் தது. புதுப்பழுப்பு இலை அந்தப் பாட்டைக் கேட்டது. நம்முடைய வேலைகளை நன்றாய்ச் செய்து முடித்தோம்; இலைகளுக்கு விடு தலையாம், விடுதலை என்றால் சந்தோஷம். கனவு கண்டு மகிழும் நாள் நெருங்கியது. கடமையைச் செய்து பொன்னிறமானோம், காற்று எழுந்துவரும். நம்மைக் கையில் ஏந்திச் செல்லும். நாம்

கனவு உலகத்திற்கே போய்விடுவோம்" என்றது.

தளிர் இலை, இதைக் கேட்டது. "இன்பநாள்! இன்பநாள்! இன்று தான் இன்பநாள்! என் கடமைகள் முடிந்தநாள்!" என்று பாடியது.



இளம் தென்றல் எழுந்து வந்தது. புதிய பழுப்பு இலையை மெதுவாகப் பெயர்த்து எடுத்தது. அந்த இலை பொன் ஒளிபோல காற்றில் பறந்தது. மண்ணில் கீழே கிடந்த பழுப்பு இலைகளோடு விழுந்தது. இன்பக் கனவுகள் கண்டு அயர்ந்து தூங்கி விட்டது.

85383
TB
O-13x
N48

657

விலை 4 அணா